RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt224s2221

OPEN ACCESS

# சங்க இலக்கியத்தில் சமூகம், சமுதாயம் மற்றும் சமயம் சார்ந்த பக்தி

**அ. முரளி** [அ, *]

[அ] தமிழ்த்துறை, அறிஞர் அண்ணா அரசு கலைக்கல்லூரி, விழுப்புரம்-605602, தமிழ்நாடு, இந்தியா

# Community, Society, and Religion in Sangam Literature

**A. Murali** [a, *]

[a] Department of Tamil, Arignar Anna Government Arts Collage, Villupuram-605602, Tamil Nadu, India

* Corresponding Author: muralianbazhagan1987@gmail.com

Received: 21.09.2022
Revised: 28-10-2022
Accepted: 04-11-2022
Published: 01-12-2022

Check for updates

**ABSTRACT**

The life of the Sangam age is divided into Akam and Puram. It developed intrinsic virtues among the people of the Sangam age. The social formation is an improved form of creation from earlier narrow relationships. The social formation of the Sangam age is based on the Sangam age alone. The fundamentals of society, its peculiarities, and the changes that took place from the Sangam period to the present day are explained here. The Sangam society divides family life into 'secret love' and 'chastity,' and the Sangam songs speak of the worldly life of 'secret love' and 'chastity' between the leader and the leader.

**Keywords:** Spoken Language, Sangam Society, Society is a Regional Case

## முன்னுரை

ஈராயிரம் ஆண்டகளுக்கு முற்பட்டது மற்றும் பழமையைக் கொண்டது. சங்ககால சமூகம், சமுதாயம், சமயம், ஆகும். சங்ககால சமூக சமுதாயத்துடன் தொடர்புடைய பழமையான சமூகமான கிரேக்கம் இன்று இல்லை வேறு விதமாக மாறிவிட்டது. சங்ககால சமூக சமுதாயம் இன்றளவும் அழியாமல் இருக்கின்றது. காலத்தால் சங்க கால சமூகம், சமுதாயம் அழிந்துவிடாது நிலைபெற்று இருப்பதற்குக் காரணம் அது பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல என்ற கொள்கைமுறையின் படி தன்னைக் காலந்தோரும் மாற்றிக் கொண்டு வந்துள்ளது.

சங்ககால சமூகம், சமுதாயம் மாற்றங்களை ஏற்கின்ற, மாற்றத்தை விரும்புகின்ற சமூக, சமுதாயமாக விளங்குகின்றது. இவற்றை வரலாற்றுப் போக்கில் அந்தந்தக் காலத்து இக்கியங்கள் வெளிப்படுத்தி வந்துள்ளன. சங்க காலத்தில் காதல், வீரம் போன்றவையும், சங்கம் மறுவிய காலத்தில் அன்பு, அறம் போன்றவையும், பக்தி காலத்தில் தெய்வ பக்தியும், சிற்றிலக்கிய காலத்தில் பக்தி காதல் போன்றவையும் நவீன காலத்தில் சுதந்திரம், தீண்டாமை ஒழிப்பு, பெண் விடுதலை போன்றவையும் பாடு பொருள்களாயின.

## சங்ககால சமூக உருவாக்கம்

சங்க கால சமூக உருவாக்கம் என்பது முந்தைய குறுகிய உறவுகளில் இருந்து ஒரு மேம்பட்ட உற்பத்தி முறைகளுக்கும் சமூக உறவுகளுக்கும் சமூகம் மாற்றமடைவதை குறிக்கின்றது.

சமுதாய ரீதியான உற்பத்தியில் மனிதர் ஈடுபட்டு வரும்பொழுது சில திட்டவட்டமான உறவுகளிலே அவர்களை அனைவரும் சேர்த்துக் கொள்கின்றனர். சமுதாய உருவாக்கம் நடக்க வேண்டுமானால் இந்த உறவுகளில் இருந்தே இருக்கும். இந்த உற்பத்தி உறவுகளின் மொத்தத் தொகைதான் சமுதாயத்தின் பொருளாதார அமைப்பாகும். இந்த உண்மையான உறவுகளுக்கு பொருத்தமாகத்தான் சமுதாய உணர்வின் திட்ட வட்டமான வடிவங்கள் விளங்குகின்றன. பௌதீக வாழ்க்கையில் நடைபெறும் பொருள் உற்பத்தி முறையே, மனித வாழ்வின் சமுதாய வளர்ச்சிப் போக்கின் அரசியல் வளர்ச்சிப் போக்கின், ஆன்மீக வளர்ச்சிப் போக்கின் பொது தன்மையை விளக்குகிறது (Hanumanthan, 1979).

சமூக மாற்றங்களை விரும்புகின்ற சமூகமாக இருந்து வருகின்றது. இதனை சங்க இலக்கியங்கள் வெளிப்படுத்தி வந்துள்ளது.

“சங்ககாலத்தில்

யாயும் ஞாயும் யார்ஆ கியரோ?

எந்தையும் நுந்தையும் எம்முறைக்கேளிர்?

யானம் நீயும் எவ்வழி அறிதும்?

செம்புலப் பெயல்நீர் போல

அன்புடை நெஞ்சம் தாம்கலந்தனவே

எனக் காதலும்,

சிற்றில் நற்றூண் பற்றி நின்மகன்

யாண்டுளனோ? என வினவுதி என்மகன்

யாண்டு உளன் ஆயினும் அறியேன் ஓரும்

புலிசேர்ந்து போகிய கல் அளைபோல,

ஈன்ற வயிறோ இதுவே

தோன்றுவன் மாதோ போர்க்களத்தானே!”

மக்கள் சமண, பௌத்த சமயத்தினை ஏற்றனர் (Parimanam, 2011). என்றபோர் எதிர்ப்பு குறித்த கருத்துகள் இலக்கியப் பாடுபொருளானது. கால ஓட்டத்தில் சமண பௌத்த கருத்துக்கள் வெறும் வறட்டு சூத்திரமாக மாறிய காலத்தில் இவை மக்கள் செல்வாக்கிழந்தன. இச்சூழலில் சைவ, வைணவ பக்தியை,

“மாசில் வீணையும் மாலை மதியமும்

வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்

மூசு வண்டறை பொய்கையும் போன்றதே

ஈசன் எந்தை இணையடி நீழலே

உளன் கண்டாய், நல்நெஞ்சே!

உத்தமன் என்றும்

உளன் கண்டாய் உள்ளுவார் உள்ளத்து

உளன் கண்டாய்

வெள்ளத்தின் உள்ளானும்,

வேங்கடத்து மேயானும்,

உள்ளத்தின் உள்ளான் என்று ஓர்”

என்பதனை மக்களிடையே கொண்டு சேர்த்தனர். இதனை மக்கள் ஏற்றுக்கொண்டனர். நாயன்மார்கள், ஆழ்வார்களின் வாழ்க்கை வரலாறு இதற்கு தக்க சான்றாகும். பக்தி இயக்கங்கள் வளர்ந்து விழ்ச்சியுற்ற காலத்தின் பின் மக்கள் வாழ்க்கை வேறுவிதமாக மாறியது.

## சங்க கால சமுதாய உருவாக்கம்

சங்க கால மக்கள் வாழ்க்கை அகவாழ்க்கை, புறவாழ்க்கை என இரண்டு பகுதிகளாக பிரித்தனர். அக வாழ்க்கையை ஏழாகக் குறிப்பிடும் தொல்காப்பியம், ஒவ்வொரு திணைக்கும் உரிய உரிப்பொருளையும் கூறுகிறது (Sanmugam Pillai, 2010). அக வாழ்வு களவு, கற்பு என்று இருவகைபடும் களவு வாழ்க்கை என்பது ஆணும் பெண்ணுமாகிய இருவரும் ஊராரும் உறவினரும் அறியாமல் பகலிலும் இரவிலும் குறித்த இடத்தில் சந்திப்பதேயாகும். அந்நிலையில் தோழி அறத்தொடு நின்று கற்பு வாழ்க்கை மேற்கொள்வதற்குத் துணை நிற்பாள்.

## மக்கட் செல்வம்

தன் இணத்தைத் தொடர்ந்து வாழச் செய்யும் விழைவும் அதற்கான முயற்சியும் அனைத்து உயிர் களிடத்தும் காணப்படுகிற பண்பாகும். இப்பண்பு மற்ற உயிர்களிடத்தில் அதன் பண்புகளின் அடிப்படையில் அமைய மனித இனத்தில் மட்டும் உணர்வின் அடிப்படையில் அமைந்துள்ளது.

இத்தகையச் சிறப்புடைய மக்கள் செல்லவத்தின் மேன்மையைப் புலவர்கள் போற்றியுள்ளனர். உலகில் எத்தகைய சிறந்த செல்வம் பெற்றிருப்பினும் மக்கள் பேரில்லாத வாழ்க்கைப் பயனற்றதாகிவிடும்.

“மங்கல மென்ப மனைமாட்சி மற்றதன்

நன்கல நன்மக்கட் பேறு” (Parimelalhagar, 2002)

என்று திருக்குறளும் மக்கட் செல்வம் வீட்டிற்கு அழக என்று கூறுகிறது.

## விருந்தோம்பல்

விருந்தோம்பல் என்பது சங்ககாலத் தமிழ் மக்களின் தலையாயப் பண்புகளுள் ஒன்று விருந்து என்றால் புதுமை, புதியவர் என்ற பொருள் தொல்காப்பியம் விருந்தே தானும் புதுவது என்கிறது இல்லறத்தின் இன்றியமையாத அறமாக விருந்தோம்பல் கருதப்பட்டது.

களவு வாழ்க்கையில் ஈடுபட்ட தலைவன் கற்பு வாழ்க்கைக்குரிய விருந்தோம்பல் குறித்துச் சிந்திப்பதன் வாயிலாக விருந்தோம்பும் முறையை

“சாறயர்ந் தன்ன மிடாஅச் சென்றி

வருநர்க்கு வரையா வளநகர் பொற்ப

மலரத் திறந்த வாயில் பலருணப்

பைந்தினம் ஒழுகிய நெய்ம்மலி அடிசில்

வசை இல் வான்திணைப் புரையோர் கடும்பொடு

விருந்துண்டு எஞ்சிய மிச்சில் பெருந்தகை

நின்னொடு உண்டலும் புரைவது”

என்று விருந்தினர் உண்டு எஞ்சிய மிச்சிலைத் தலைவியிட அவன் உண்ணுதலே தக்கது எனத் தலைவன் கூற்றாகக் கூறுகிறது குறிஞ்சிப்பாட்டு (Rasamanikanar, 2011).

மலர்ச்சி, இன்சொல் ஆகியவையாகும். இவையனைத்தும் அக்கால மக்களிடையே காணப்பட்டன.

"பரிசிலரை மன்னர்கள் விருந்தோம்பிய முறையை

ஈற்றா விருப்பின் போற்றுபு நோக்கி

மகமுறை மகமுறை நோக்கி முகனமர்ந்து

ஆனா விருப்பின் தான்நிற்று ஊட்டி

விரும்புவன பேணி

ஆனா விருப்பின் தானின்று ஊட்டி

தலைநாள் அன்ன புகாலாடு வழிசிறந்து

பலநாள் நிற்பினும் பெறுகுவீர்",

என இலக்கியங்கள் கூறுகின்றன.

## உடை

மனித இனத்தின் நாகரிக வாழ்க்கையின் அடையாச் சின்னமாய் இருப்பது உடை பண்டைக் காலத்தில் மலர்கள், தழை இவற்றைக் கொண்டு ஆடை உடுத்தினர், கொய்த

தழைகளைக் கட்டி ஆடையாக உடுத்தியதைக் குறிஞ்சிப்பாட்டு கொய்தழை தைஇ" என்றும் பட்டினப்பாலை பைந்தழை மாமகளிர் என்றும் கூறுகின்றன.

வீரர்கள் போர்த் தொழிலுக்கு ஏற்றவாறு இறுக்கமான உடையை அணிந்தனர் அரசு பணி செய்வோர், யவணர் போன்ற வெளிநாட்டினர் மெய்ப்பையும் மிலேச்சர், வம்பலர் போன்றோர் சட்டையும் அணிந்தனர். இதனை,

"மெய்ப்பை புக்க வெருவரும் தோற்றம்"

"அடிபுதை அரணம் எய்திப் படம்புக்கு

படம்புகு மிலேச்சர் உழையராக"

என்பனவற்றால் அறியலாம்.

## அணிகள்

சங்க கால மக்கள் ஆடைகளில் மட்டுமன்றி அணிகலன் அணிவதிலும் வளர்ச்சிப் பெற்றிருந்தனர், உடம்பில் தலை முதல் கால்வரை அணியும் பல வகையான அணிகள் அணிந்தனர், பொன், வெள்ளி போன்ற உலோகங்களால் ஆன அணிகலன்களையும் அவற்றில் முத்து, கற்கள் ஆகியவற்றைப் பதித்த அணிகலன்களையும் அணிந்தனர்.

எளிய மக்கள் இலை, பூ தழை, அரும்பு, போன்றவற்றில் அணிகலன் செய்து அணிந்தனர், அசோகின் தளிரைக் காதில் செருகி அணிந்து கொள்ளும் வழக்கம் இருந்தது.

"வண்காது நிறைந்த பிண்டி ஒண்தளிர்

செயலைத் தன்தளிர் துயல்வருங் காதினன்

செந்தீ

ஒன்பூம் பிண்டி ஒருகாது செரீஇ”

என்பன இவ்வழக்கம் இருந்தமைக்குச் சான்றாகின்றன, பெண்கள் இரண்டு காதுகளிலும் ஆண்கள் ஒரு காதிலும் அசோகின் இளந்தளிரை அணிந்தனர், மலர், தழைகளை மாலையாக்கி கழுத்தில் அணிந்தனர்.

## பழக்க வழக்கங்கள்

ஒரு செயல் தொடர்ந்து ஒருவரால் மேற்கொள்ளப்படும்போது அது பழக்கமாகிறது. அச்செயலே பலராலும் தொடர்ந்து மேற்கொள்ளப்படும் போது வழக்கமாகிறது.

## சமயம்

சமயம் என்பது மதம் அது ஒருவகைச் குறித்தலால் சமயம் எனப்பட்டது. சமைதல் நுகர்ச்சிக்குப் பதமாதல் அரிசி சோறாகச் சமைவது உண்பதற்குப் பதமாதல் -- அதன் (ஆன்மா) இறையடிமையாகச் சமைவது வீடுபேற்றிற்கு அல்லது இறைவன் திருவடிகளையடைவதற்குப் பதமாதல் என்பர் ஞா. தேவநேயப் பாவாணர் பல்வேறு சமயங்கள் பண்டைத் தமிழகத்தில் இருந்தன என்பதைப் பத்துப்பாட்டு இலக்கியங்கள் காட்டுகின்றன.

## கோயில்கள்

சங்க காலத் தமிழகத்தில் சமயங்கள் பல இருந்தன அவ்வச் சமயங்களுக்குரிய தெய்வங்களும் கோயில்களும் இருந்தன. பெரிய கோயில்கள் இருந்தன என்பதற்கான சான்றுகள் கிடைக்கவில்லை ஆயினும் கோயில்கள் இருந்தன என்பதற்குப் பத்துப்பாட்டு இலக்கியங்கள் சான்றாக விளங்குகின்றது (Rasamanikanar, 2011).

“கொண்டி மகளில் உண்டுறை மூழ்கி
அந்தி மாட்டிய நந்த விளக்கின்
மலரணி மெழுக்கம் ஏறிப் பலர் தொழ
வம்பலர் சேக்கும் கந்துடைப் பொதி”

என்னும் வரிகள் கோயில் இருந்தமையைக் காட்டுகின்றன.

கடவுளைத் தொழுவதற்காக அமைக்கப்பட்ட கோயில்கள் அம்பலங்கள் எனப்பட்டன. அக்கோயில்களில் வழிபடுவதற்குத் தொழுகுறியாக நடப்பட்ட உருவம் கந்து எனப்பட்டது.

மதுரை நகரில் சிவபெருமானுக்குத் கோயில் இருந்தது அக்கோயிலில் நடைபெற்ற அந்திக்கால விழாவை,

“நீரும் நிலனும் தீயும் வளியும்
ஆக விசும்போ டைந்துந்துடன் இயற்றிய
மழுவாள் நெடியோன தலைவனாக
மாசற விளங்கிய யாக்கையர் நாட்டத்து
வாடாப் பூவின் இமையா நாட்டத்து
நாற்ற உணவின் உருகெழு பெரியோர்க்கு
மாற்றரு மரபின் உயர்பலி கொடுமார்
அந்தி விழாவில் தூரியம் கறங்க”

என்ற வரிகள் காட்டுகின்றன, ஐம்பெரும் பூதங்களும் கலந்த உலகைப் படைத்தருளிய மழுவாகிய வாளையுடைய பிறவாயாக்கைப் பெரியோனை ஏனையோரின் முதல்வனாகக் கொண்டு, மாயோன், முருகன் முதலிய தெய்வங்களுக்கு விழா எடுத்தனர் என்றதால், தெய்வங்களுக்குக் கோயில் இருந்தமையும் அத்தெய்வங்களுக்கு மாலைக்காலத்தில் விழா நடைபெற்றமையும் அறியலாம்.

## முடிவுரை

சங்ககால சமூகம், சமுதாயம் குடும்ப வாழ்வைக் களவு, கற்பு எனப் பகுத்துப் காட்டுகிறது. தலைவன், தலைவி இடையே நிகழும் களவு கற்பு என்னும் உலகியல் வாழ்வை நாடக முறை என்ற சங்கப் பாடல்கள் விளக்குகின்றன. அகவாழ்கையாகிய களவு வாழ்க்கையிலும் ஒழுக்கத்தை உயிரென மதித்தனர், அவ்வாழ்க்கையிலும் கற்பு வாழ்க்கைக்குரிய விருந்தோம்பல் பண்பு குறித்து சிந்தித்தனர். கோயில்களுக்கு பல வகையான தெய்வங்களும் இருந்தன, உருவ வணக்கம் அருவ வணக்கம் இருந்தது வழிபாட்டு முறையில் உயிர் பலி கொடுக்கும் வழக்கமும் மலரும் நெல்லும் தூவி வழிப்படும் வழக்கமும் இருந்தன.

## References


Hanumanthan, K.R. (1979) History of Ancient Civilization, Tamilnadu Textbook and Educational Services Corporation, Chennai, India.

Parimanam, A.M. (2011) Sanga Ilakiyam, New Century Book House, Chennai, India.

Parimelalhagar, (2002) Thirukural, Saradha Pathippagam, Chennai, India

Rasamanikanar, M. (2011) Pathupattu Araichi, University of Madras, Chennai, India.

Sanmugam Pillai, M. (2010) Tholkappiyam Ilampuranam, Mullai Nilayam, Chennai, India.


**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License